

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.07.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் சார்நிலைப் பணியில் செயல் அலுவலர் நிலை1 பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், தலைமைப் பொறியாளர் பொ. பெரியசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (23.07.2024) நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களை தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற குழுத் தலைவரும் தூத்துக்குடி மக்களவை தொகுதி உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி மற்றும் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சந்தித்து "சமக்ரா சிக்சா " திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள நிதியினை மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு உடனடியாக விடுவிப்பது குறித்து விவாதித்தனர்.



புதுடெல்லியில் நேற்று முன்தினம் (23.07.2024) ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களை தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவரும் தூத்துக்குடி மக்களவை தொகுதி உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் மற்றும் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சந்தித்து "சமக்ரா சிக்சா " திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள நிதியினை மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு உடனடியாக விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

### கறுப்பு - பழுப்பில்லாத வகையில்

# நியாயவிலைக் கடைகளில் தரமான அரிசி விநியோகம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!



திண்டுக்கல், ஜூலை 25-

ஒட்டன்சத்திரம் சட்ட மன்ற தொகுதியில் ரூ.87.78 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, ரூ.1.69 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய அமைச்சர் அர.சக்கரபாணி நியாயவிலைக் கடைகளில் கறுப்பு, பழுப்பு இல்லாத தரமான அரிசி விநியோகிக்கப்படுகிறது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்.

தமிழகத்தில் 2009 நியாய விலைக்கடைகள் பிரிக்கப்பட்டு புதியதாக முழுநேரம் மற்றும் பகுதிநேரம் நியாய விலைக்கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதில் திண்டுக்கல் மாவட்டத்தல் 230 கடைகள் பிரிக்கப்பட்டுள்ளன.

குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களில், தகுதியுள்ளவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் 16 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நியாய விலைக் கடைகளில் கைரேகை பதிவு மூலம் பதிவுகள் மேற்கொள்வதில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்க கண் கருவிழி பதிவுகள் மேற்கொள்ள 36,000 நியாயவிலைக் கடைகளிலும் கண்கருவிழி பதிவு கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

நியாயவிலைக்கடைகளில் தரமான அரிசி, பருப்பு, எண்ணைய், சர்க்கரை போன்ற பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. பொதுமக்களுக்கு தரமான அரிசி வழங்க வேண்டும் என்பதற்காக கலர்டாப்ளர் இயந்திரம் பொருத்தப்பட்ட அரிசி ஆலைகளில் மட்டுமே நெல் அரவை செய்யப்பட்டு, அரிசி கொள்முதல் செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு கறுப்பு, பழுப்பு இல்லாத தரமான அரிசி விநியோகிக்கப்படுகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, 1.14 கோடி பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1.48 இலட்சம் நபர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டு வருகிறது. தகுதியுள்ள நபர்கள் அனைவருக்கும் கலைஞர் உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார். இத்திட்டம் தற்போது, அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் காலை உணவு திட்டத்தின் மூலம் மொத்தம் 20.73 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெறுகின்றனர்.

அரசின் திட்டங்களை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சத்தியபுவனா ராஜேந்திரன், துணைத்தலைவர் தங்கம், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் கிருஷ்ணசாமி, உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மாதவரம்

# எம்.விக்னேஸ்வரன் மறைவு!

சென்னை, ஜூலை 25–

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 17வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் வசிப்பவர் எம். விக்னேஸ்வரன் என்கின்ற விகின் ஆவார். கழகத்தின் மூத்த முன்னாடியும் ஆவார்.

இவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். மருத்துவ சிகிச்சை பலனளிக்கா மல் எம். விக்னேஸ்வரன் கடந்த 22–7–2024 பிற்பகல் இயற்கை எய்தினார். அன்னாரின் உடல் வைக்கப்பட்டிருந்த தீயம்பாக்கம் கிராமத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் சென்று விக்னேஸ்வரன் அவர்களின் திருவுடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். மேலும் அவரது பெற்றோர்கள் உற்றார் உறவினர்கள் குடும்பத்தினர் கழகத்தினருக்கு தனது ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டார்.

17வது வட்டச் செயலாளர் கே .கருணாகரன் வட்டக் கழக நிர்வாகிகள் எஸ். பாலாஜி, கே. சண்முக பிரியன், பூபாலன், சுதர்சன் ஜான்சன், வில்சன், உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கொப்புடைய நாயகி அம்மன் கோயில் நிர்வாகத்திற்குட்பட்ட ரூபாய்ஒரு கோடியே 50 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட வாரச் சந்தையை சென்னையிலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நிகழ்ச்சியில பங்கேற்றார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசா அஜித், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. காரைக்குடி நகர மன்ற தலைவர் எஸ்.முத்து துரை, துணை தலைவர் என்.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



இராஜபாளையம் தொகுதியில் நேற்று முன்தினம் (23.07.2024) காலை 11 மணியளவில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் PACR அரசு மருத்துவமனையை மாவட்டத்தின் தலைமை மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது அப்பணியில் தற்போது இறுதிகட்ட பணி நடைபெற்று வருவதை தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ பார்வையிட்டார், இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளரிடம் பேசிய எம்.எல்.ஏ, மருத்துவமனை கட்டும் பணியை ஆரம்பம் முதல் இன்று வரை தொடர்ந்து கண்காணித்து வருகிறேன் இப்பணி விறுவிறுப்பாக சிறப்பாக நடைபெற்று வருகிறது. தற்போது டைல்ஸ் ஒட்டும் பணியும் மின் இணைப்பு வழங்கும் பணியும் நடைபெற்று வருவதால் மருத்துவமனை முழுவதும் சிறப்பாக வெளிச்சம் இருக்கும் வகையில் உயர்தர மின் விளக்குகள் அமைக்கப்பட வேண்டுமென கூறினார் அதனைத்தொடர்ந்து *மருத்துவமனைக்கு தேவையான M R I ஸ்கேன் உள்பட அனைத்து மருத்துவகருவிகளும் அதற்குரிய மருத்துவர்கள் செவிலியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களை நியமனம் செய்யும் பணியும் நடைபெற்றுவருவதால் கட்டிடப் பணியை விரைவுபடுத்தி செப்டம்பர் மாதத்திற்குள் முடிக்குமாறும் அதனைத்தொடர்ந்து அக்டோபர் மாதம் மருத்துவமனையை திறக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கூறினார். இந்நிகழ்வில் மருத்துவர் சுரேஷ், சேத்தூர், சேர்மன் பாலசுப்பிரமணியன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பரமசிவம், பொறியாளர் பாலசுப்பிரமணி, கழக நிர்வாகிகள் மருத்துவமனை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் மாவட்டத்திற்கு கூட்டுறவுத்துறை சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தந்து

# மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்தியவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஆத்தூரில்

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு





திண்டுக்கல், ஜூலை 25-

திண்டுக்கல் மாவட்டத்திற்கு கூட்டுறவுத்துறை சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தந்து மாணவர்களின் கல்வி தரத்தை உயர்த்தியவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் என்றும் திண்டுக்கல் மாவட்டத்திற்கு 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கொண்டுவந்தவர் தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் ஒருவரே என்று ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதலாமாண்டு மாணவர்களுக்கான வகுப்புகளை துவக்கி வைத்து ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் சீவல்சரகு ஊராட்சி பகுதியில் தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் கூட்டுறவுத் துறை சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டுவரப்பட்டது. தற்போது கல்லூரிக்காக ரூ.99கோடி மதிப்பில் புதிய கல்லூரி கட்டடப்பட்டு வருகிறது. ஜெய்னி கல்லூரி வளாகத்தில் செயல்படும் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2024 25ம் கல்வியாண்டிற்கான வகுப்புகள் துவக்க விழா கல்லூரி வளாகத்தில் உள்ள அரங்கத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி தலைமை தாங்கினார்.

கோட்டாட்சியர் சக்திவேல், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன் வரவேற்று பேசினார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட தி.மு.க. மாநில துணைப்பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி வகுப்புகளை துவக்கி வைத்துவிட்டு மாணவர்கள் மத்தியில் பேசும்போது இன்று இந்திய அளவில் தமிழக மாணவர்களின் கல்வித்தரம் உயர்ந்து வருகிறது என்றால் அதற்கு காரணம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒருவரே. ஒருவருக்கு எவ்வளவு செல்வம் இருந்தாலும் குறையாத செல்வமாகக இருப்பது கல்வி செல்வம் ஒன்றேதான்.

இதை உணர்த்தும் வகையில்தான் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு சிற்றுண்டி திட்டத்தில் தொடங்கி கல்லூரி மாணவ மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தையும் கல்வியையும காப்பாற்றும் காவலராக தமிழக முதல்வர் உள்ளார். இன்று இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் உள்ள முதலமைச்சர்கள் நமது திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் நலத்திட்டங்களை பின்பற்றி செயல்படுத்தி வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் ஆறு கலை மற்றும் அறிவியல் கல்லூரி உள்ளது. விரைவில் நத்தம் தொகுதிக்கும் கல்லூரி கொண்டுவரப்படும். நிலக்கோட்டை தொகுதியில் முதன்முதலாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டுவந்தபோது அதற்கான இடத்தை அப்போதைய எம்.எல்.ஏ, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பொன்னம்மாள் அவர்களிடம் நான் தேர்வு செய்து கொடுத்ததால் சிரமமின்றி நிலக்கோட்டை தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டுவரப்பட்டது. அதன்பின்பு அதிமுக ஆட்சி காலத்தில் எந்த ஒரு கல்லூரியும் கொண்டுவரவில்லை. இப்போது தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொகுதி வாரியாக கொண்டுவரப்பட்டது. அதில் முத்தாய்ப்பாக ஆத்தூர் தொகுதிக்கு மட்டும் ஆத்தூர் மற்றும் ரெட்டியார்சத்திரத்தில் கல்லூரிகள் கொண்டுவரப்பட்டதால் மாணவர்கள் சிரமமின்றி உயர்கல்வி கற்கும் நிலை உருவாகியுள்ளது என்றார்.

நான்திண்டுக்கல்மாவட்ட மாணவர்களின் நலன் கருதி தமிழக முதல்வரிடம் எத்தனைமுறை கோரிக்கை வைத்தாலும் அதை நிறைவேற்றி தரும் ஒப்பற்ற தலைவராக தமிழக முதல்வர் உள்ளார் என்றார்.

நிகழ்ச்சியில் கல்லூரி நிர்வாக அலுவலர் ந.மதி, சரக துணைப்பதிவாளர் உஷா நந்தினி, ஆத்தூர் கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துணை முதல்வர் பழனிக்குமார், கல்லூரி மேலாளர் மற்றும் கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் இரா. கணேசன், கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் ம.செல்வகுமார், ஆத்தூர் தாசில்தார் வடிவேல் முருகன், சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் பிரபா, ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குமரவேல், அருள்கலாவதி, தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, வீரக்கல் செல்வி காங்கேயன், வக்கம்பட்டி காணிக்கைராஜ், சித்தரேவு சாதிக், பாப்பாத்தி, நாகவள்ளி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் பஞ்சம்பட்டி மணி, விவேகானந்தன்,

மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் பத்மாவதி ராஜகணேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், ஊராட்சிமன்ற தலைவர்கள் ஆத்தூர் ஜம்ரூத்பேகம், ராஜேஸ்வரி தங்கவேல், அக்கரைப்பட்டி லெட்சுமி சக்திவேல், சீவல்சரகு ராணி ராஜேந்திரன், ஆலமரத்துப்பட்டி ஆறுமுகம், செட்டியபட்டி ராஜா, பஞ்சம்பட்டி பாப்பாத்தி நாகராஜ், சித்தையன்கோட்டை பேரூர்கழக செயலாளர் சக்திவேல், அய்யம்பாளையம் பேரூராட்சிமன்ற தலைவர் ரேகா அய்யப்பன், மாவட்ட சிறுபான்மையினர் அணியை சேர்ந்த மரக்காயர், இலக்கிய அணியை சேர்ந்த பாறைப்பட்டி முருகன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் வீரக்கல் காங்கேயன், கணேசன், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், அரசு ஒப்பந்தகாரர் ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், மற்றும் உதவி பேராசிரியர்கள் அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக கல்லூரி முதல்வர் இரா.சுபாசினி நன்றி கூறினார்.